வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3534 /ஆ4 /2021 நாள் :25.11.2021

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6, தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவர் திறனாய்வுத் தேர்வு (Trust Examination) ஜனவரி- 2022 தேர்வு நடத்துதல் - அறிவுரைகள் வழங்குதல் - சார்பாக.

பார்வை : 1.சென்னை-6, அரசு தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 022738/டி /2021நாள் :2411.2021
2.அரசாணை நிலை எண்.960 கல்வித் துறை (இ2) நாள் :11.10.1991
3.அரசாணை நிலை எண். 256, பள்ளிக் கல்வி துறை(இ2) நாள் :22.12.2008

---

அரசு தேர்வுத் துறையால் ஆண்டு தோறும் தமிழ்நாடு ஊரகப்பகுதி மாணவர்களுக்கான "ஊரகத் திறனாய்வு தேர்வு " பார்வையில் கண்ட அரசாணையின் படி நடைபெற்று வருகிறது.

இத்தேர்விற்கு ஊரகப் பகுதியில் அதாவது கிராமப்புற பஞ்சாயத்து மற்றும் டவுன்சிப் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 2021 - 2022 ஆம் கல்வியான்டில் 9-ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் இத்திறனாய்வு தேர்வு எழுதுவதற்கு தகுதி படைத்தவராவார்கள். (குறிப்பு - நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் படிக்கும் மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர்.)

இத்தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவ மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.1,00,000/- க்கு (ரூபாய் ஒரு இலட்சத்திற்கு ) மிகாமல் இருத்தல் வேண்டும்.

30.01.2022 அன்று நடைபெறவுள்ள ஊரகத் திறனாய்வுத் தேர்வுக்கான வெற்று விண்ணப்பங்களை 06.12.2021 முதல் 14.12.2021 வரை www.dge.tn.gov.in என்ற அரசு தேர்வுகள் இயக்ககத்தின் இணையதளம் மூலம் பள்ளித் தலைமையாசிரியர்கள் பதிவிறக்கம் செய்து, அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்பட்ட வெற்று விண்ணப்பங்களை மாணவர்களுக்கு வழங்கி பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் வருவாய்ச் சான்றினையும் இணைத்து 14.12,.2021 க்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர் ஒவ்வொருவரிடமிருந்தும் தேர்வுக் கட்டணமாக ரூ.10-னை பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் தலைமையாசிரியர்கள் இணைப்பில் கண்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி ONLINE.ல் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

தேர்வர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட அவ்விண்ணப்பங்களை பள்ளிக்கு வழங்கப்பட்ட USER ID, Password மூலம் தலைமை ஆசிரியர் தேர்வர்களின் அனைத்து விண்ணப்பங்களையும் 09.12.2021 முதல் 20.12.2021 வரை Online மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்படி தேதிக்கு பிறகு பதிவு செய்வது இயலாது என்பதால் தேர்வர்கள் பாதிக்கப்படா வண்ணம் 20.12.2021 க்குள் பதிவு செய்து இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தை செலுத்துமாறு. தெரிவிக்கப்படுகிறது. பதிவேற்றம் முடிந்த பிறகு Summary Report, பள்ளியில் பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் (தேர்வர்களின் விவரங்களுடன்). வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 இருக்கைப் பிரிவில் நேரில் ஒப்படைத்திட வேண்டும் என அனைத்து தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அறிவுரைகளை தவாறது பின்பற்றி தேர்வுகளை நடத்துவதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுமாறு வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: 1. அரசாணை எண்.960 கல்வித் (இ2) துறை, நாள். 11.01.1991.

2,. அரசாணை நிலை எண், 256, பள்ளிக் கல்வித் துறை (இ2) நாள். 22.12.008.

3, அறிக்கை.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :
மாவட்ட கல்வி அலுவலர்,வேலூர்.
(தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும் அனுப்பப் படுகிறது)

நகல்
அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.